இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 330 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 25 – திங்கள்கிழமை 10 ஜூலை 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 330: Thiruvalluvar Year - 2054 - Aani 25 - Monday 10 July 2023 - Chennai 12 Pages ₹ 5.00


## தமிழ் மக்களின் உணர்வை புண்படுத்துகிறார்! அரசியல் சட்டத்துக்குப் புறம்பாகச் செயல்படுகிறார்!

# ஆளுநராக ஆர்.என். ரவி நீடிப்பது பொருத்தமானதா?

## இந்திய குடியரசுத் தலைவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நீண்ட விளக்கக் கடிதம்!

**சென்னை,ஜூலை.10–**

**“தமிழ் மக்களின் உணர்வைப் புண்படுத்துவது மட்டுமின்றி அரசியல் சட்டத்துக்குப் புறம்பாகவும் செயல்படும் ஆர்.என்.ரவி அவர்கள் ஆளுநராக நீடிப்பது பொருத்த மானதா?” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு எழுதியுள்ள நீண்ட விளக்கக் கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களின் செயல்பாடுகள் குறித்து குடியரசுத் தலைவருக்கு 08.07.2023 அன்று கடிதம் எழுதியுள்ளார். இப்பொருள் குறித்த தனது 10.1.2023 நாளிட்ட கடிதத்தினை 12.1. 2023 அன்று புதுடெல்லியில், தமிழ்நாடு அரசின் சட்ட அமைச்சர் மற்றும் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர் அவர்களிடம் அளித்ததை நினைவுகூர்வதாகவும், அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு மற்றும் தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்து தற்போது குடியரசுத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களின் செயல்பாடுகள் தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் எதிராக அமைந்துள்ளது குறித்தும், அரசியலமைப்புச் சட்ட மீறல்கள் குறித்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு 8.7.2023 அன்று எழுதிய கடித விவரம் வருமாறு:–

“மாநிலத்தின் நிருவாக அதிகாரம் ஆளுநரிடம் உள்ளதாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. இருப்பினும், பெயரளவில் மாநிலத்தின் தலைவரான ஆளுநர், தனது அதிகாரத்தை மாநில முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவைக் குழுவின் ஆலோசனை மற்றும் அறிவுரைப்படியே பயன்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது” என்றும் முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**மக்களாட்சித் தத்துவம்; நமது அரசியல் சாசனத்தின் உயிர் நாடி!**

ஆளுநர் என்பவர், முக்கியமான அரசியலமைப்புக் கடமைகளைச் செய்பவராகவும், பாரபட்சமற்றவராக வும், அப்பழுக்கற்ற நேர்மையான நபராகவும் இருக்கவேண்டும் என்று தெரிவித்துள்ள முதலமைச்சர், மக்களாட்சித் தத்துவம் என்பது நமது அரசியல் சாசனத்தின் உயிர்நாடி என்றும், அந்த மக்களால் தேர்தெடுக்கப்பட்ட அரசை நிறுவுவதற்காகவே, நமது சுதந்திரப் போராட்ட வீரர்கள் காலனிய சக்திகளை எதிர்த்துப் போராடி, தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தனர்.





**இந்த அரசியலமைப்புப் பதவியை வகிக்கத் தகுதியற்றவர்!**

அரசியல் சாசனத்தின் மீதும், அது பிரதிநிதித்துவப்படுத்தும் கொள்கைகள் மீதும் ஆளுநருக்கு முழு நம்பிக்கை இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள முதலமைச்சர், அரசியலமைப்பின் இலட்சியங்கள் முகவுரையில் தொகுக்கப்பட்டுள்ளன என்றும், இந்தியா ஒரு இறையாண்மை மிக்க, சோசலிச, மதச்சார்பற்ற, ஜனநாயகக் குடியரசு நாடு என்றும், இந்த அடிப்படைக் கொள்கைகளில் ஏதேனும் ஒன்றில் நம்பிக்கை இல்லாத ஆளுநர், அரசியலமைப்புப் பதவியை வகிக்கத் தகுதியற்றவர்.

அரசியல்வாதியாக மாறும் ஒரு ஆளுநர், அப்பதவியில் தொடரவே கூடாது என்றும், மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட மாநில அரசின் கொள்கை, செயல்பாடுகள், முடிவுகளுக்குச் சவால் விடும் வகையில் ஆளுநர் அரசியல் களத்தில் இறங்க வேண்டும் என்பது அரசியல் சாசனத்தின் நோக்கமல்ல.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் கொள்கைக்கு ஆளுநர் வெளிப்படையாக முரண்படுவது அல்லது சட்டமன்றம் நிறைவேற்றும் சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்குவதில் தேவையற்ற காலதாமதம் செய்து முட்டுக்கட்டை போடுவது அல்லது கூட்டாட்சி மற்றும் மதச்சார்பின்மை போன்ற அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களுக்கு எதிராகச் செயல்படுவது போன்றதொரு சூழ்நிலையை அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் ஒருபோதும் கற்பனை செய்திருக்க மாட்டார்கள்.

“2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தமிழ்நாட்டை சமூகப் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல, திராவிட

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி தொடர்ந்தால் நாட்டுக்குப் பேராபத்து!

# நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியே நம் இலக்கு!

## திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜூலை 10 -**

**ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி தொடர்ந்தால் நாட்டுக்கு பேராபத்து என்றும், நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியே நம் இலக்கு என்றும் திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு இல்ல மணவிழாவில் மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நேற்று (09.07.2023) நடைபெற்ற திராவிட இயக்க எழுத்தாளர் திருநாவுக்கரசு அவர்களின் இல்ல திருமண விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

திராவிட இயக்கத்தின் எழுத்தாளர் க.திருநாவுக்கரசு அவர்களின் புதல்வர் சிற்றரசு அவர்களுக்கும், நினைவில் வாழும் தொழிற்சங்கத்தின் தலைவர் வி.எம்.ஆர். சபாபதி - சாவித்திரி அம்மாள் இணையருடைய பெயர்த்தி, நினைவில் வாழும் தயாமூர்த்தி - இராணி இணையருடைய மூத்த புதல்வி த.எழிலரசி அவர்களுக்கும் நம்முடைய அன்பான வாழ்த்துகளோடு மணவிழா நிகழ்ச்சி நிறைவேறி யிருக்கிறது.

**மணவிழாவை நடத்தி வைக்க வாய்ப்புக் கிடைத்ததில் மகிழ்ச்சி!**

மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்று, மணவிழாவை நடத்தி வைத்து, அதே நேரத்தில் மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பும் எனக்கு கிடைத்திருக்கிறது. வாய்ப்பினை பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றியுரை ஆற்றிய அண்ணன் திருநாவுக்கரசு அவர்கள் எப்பொழுதும் - எதையுமே வெளிப்படையாக பேசக்கூடியவர். உள்ளொன்று வைத்து வெளியொன்று பேசமாட்டார். அதனால்தான் நன்றியுரை ஆற்றுகிறபோது இந்த அழைப்பிதழில் வெளியிடப்பட்டிருக்கக் கூடியவர்கள் பெரும்பாலும் வரவில்லை என்பதை மனதில் ஏற்றுக் கொண்டு அந்த வருத்தத்தை கொஞ்சம் இங்கு வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

அவர் எனக்கு சால்வை அணிவித்த போது, பட்டாடை அணிவித்தபோது நான் சொன்னேன். “நீங்கள் வருத்தப்பட வேண்டாம்... எல்லோருக்கும் சேர்த்துதான் நாங்கள் வந்திருக்கிறோமே, நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்“. சரி... சரி என்று தன்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

**திராவிட இயக்க எழுத்தாளர் என தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்!**

அது மட்டுமல்ல, இன்றைக்குத் திருமண நிகழ்ச்சிகள் நிரம்ப நடந்து கொண்டிருக்கிறது. பல அமைச்சர்கள் பல்வேறு மாவட்டங்களுக்கு பல நிகழ்ச்சிகளுக்குச் செல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆளாகி அவர்களும் சென்றிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் மாலையில் வரவேற்பு நிகழ்ச்சியும் இருக்கிறது. கவலைப் படாதீர்கள்... வராதவர்கள் எல்லாம் மாலையில் வருவார்கள்... மணமக்களை வாழ்த்துவார்கள். நீங்களே இரண்டாகப் பிரித்துப் போட்டிருக்கிறீர்கள். அதனால் அவர் கவலைப்படும் அளவிற்கு எதுவும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய திராவிட இயக்கத்தின் எழுத்தாளர் அண்ணன் திருநாவுக்கரசு அவர்களைப் பற்றி இங்கே வாழ்த்தியவர்கள் எல்லாம் குறிப்பிட்டுச் சொன்னார்கள். விழா அழைப்பிதழிலேயே திராவிட இயக்க எழுத்தாளர் என்று தன்னை அடையாளப்படுத்தியிருக்கிறார். இன்றைக்கு வெளிப்படையாக அதை யாரும் வெளிப்படுத்துவதற்கு அச்சத்தின் காரணமாக கொஞ்சம் யோசிப்பார்கள்.

> **ஒரே ஒரு முக்கியம் என்ன என்று கேட்டீர்கள் என்றால், யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதைவிட, யார் ஆட்சி இருக்கக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்ற அந்த ஒரு கருத்தை அடிப்படையாக வைத்து அந்தக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது.**
>
> **தொடர்ந்து வருகின்ற 17, 18 ஆகிய தேதிகளில் கர்நாடக மாநிலத்தில் - பெங்களூர் நகரத்தில் நடைபெறவிருக்கும் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.**

ஆனால் திருநாவுக்கரசு போன்றவர்களுக்குத்தான் அந்தத் துணிவு உண்டு, துணிச்சல் உண்டு. அந்த அடிப்படையில் தான் அவருடைய அடையாளத்தை அவர் இந்த அழைப்பிதழில் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

**திராவிட இயக்கத்தில் பூத்த மலர் திருநாவுக்கரசு என்றார் கலைஞர்!**

அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்கள் “திராவிட இயக்கத்தில் பூத்த மலர்” திருநாவுக்கரசு அவர்கள் என்று மனதாரப் பாராட்டியிருக்கிறார்கள். அதேபோல நம்முடைய இனமான பேராசிரியர் பெருந்தகை ஒரு முறை திருநாவுக்கரசு அவர்களைப் பாராட்டி பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார். “தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் தொண்டைத் தொடர்பவர் நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள்” என்று பெருமையோடு பாராட்டியிருக்கிறார். எனவே நடமாடும் ஒரு அறிவுக்கருவூலமாக – திராவிட இயக்கத்தின் கணினியாக - திராவிட இயக்கத்தின் வரலாற்றுப் பக்கங்களைத் தலைமுறைகள் கடந்து தனது பேனாமுனையில் எடுத்துச் சொல்லும் ஆற்றலைப் பெற்றவராக நம்முடைய எழுத்தாளர் திருநாவுக்கரசு அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

**திருநாவுக்கரசு எழுதிய கழக வரலாற்று நூலை வெளியிட்டேன்!**

நீதிக்கட்சியை பற்றி - அதன் வரலாற்றைப் பற்றி இரண்டு பாகங்களாக நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் எழுதி

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்